# புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

செய்தி மடல் - 22 ஆகஸ்ட் - 2017

## புதிய தலைமுறை அறக்கட்டளை - SRM பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஊக்குவிப்பு (Motivation) நிகழ்ச்சி





புதிய தலைமுறை அறக்கட்டளையின் விழுதுகள் இலவச உயர்கல்வி திட்டத்தின் மூலம் 2017-2018 ஆண்டிற்கான முதல் ஊக்குவிப்பு (Motivation) நிகழ்ச்சி ஜூலை 28, 2017 அன்று மாலை 5.00 மணியளவில் காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.




புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வேங்கடகிரி, எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத்துறை இயக்குனர் வைத்தியநாதன், எஸ். ஆர். எம். பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத்துறை ஆலோசகர் நந்தகோபால் மற்றும் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் NSS Coordinator ராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக மாணவர்களுக்கு புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பாக அடையாள அட்டை (ID Card) வழங்கப்பட்டு, மாணவர்களுடன் அறக்கட்டளை குழுவினர் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்த ஆண்டு நடைபெற இருக்கும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் குறித்த அறிவிப்பும் வெளியிடப்பட்டது. 170க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

> "புதிய தலைமுறை அறக்கட்டளையின் நிகழ்ச்சிகளை முதல் வருட மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."
>
> S. மனோஜ் பிரபு, B.Tech, EEE, Final Year

## "ஆடு வளர்ப்பு - அதிக வருமானம் தரும் பெரிய தொழிலாக உருவெடுத்து வருகிறது"

### சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கம் - கொடைக்கானல்



புதிய தலைமுறை அறக்கட்டளையின் சுயதொழில் மன்றம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் மற்றும் மத்திய செம்மறிஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையம், மன்னவனூர், கொடைக்கானல் இணைந்து கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் ஒரு நாள் சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கத்தினை ஜுலை 16, 2017 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்தியது.



மேடையில் சிறப்பு விருந்தினர்கள் வீற்றிருந்த காட்சி

பின்னர் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர். ஜி. வள்ளி, பல்கலைக்கழகத்தின் முதல்வர் முனைவர் சந்திரமணி ஜெபராணி மற்றும் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் கீதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ஆடு வளர்ப்பு தொழில் மற்றும் பராமரிக்கும் முறைகள் குறித்து, கொடைக்கானல் மன்னவனூரில் உள்ள மத்திய செம்மறி ஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையத்திலிருந்து, முனைவர். S.M.K. திருமாறன், மற்றும் முனைவர். ராஜேந்திரன், முனைவர். இரமாச்சந்திரன், முனைவர் சி. சவுந்தரராஜன், மற்றும் முனைவர் எஸ். சிவசீலன், ஏற்றுமதி இறக்குமதி தொழில் குறித்து கே.எஸ். கமாலுதீன், நிர்வாக இயக்குனர், Bluebharath Exim Pvt. Ltd, Chennai ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இக்கருத்தரங்கில் 300க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். **மேலும் நிகழ்ச்சி குறித்த விரிவான தகவலுக்கு www.microenterprises-ptf.org வலைதளத்தில் காணலாம்.**

> "ஆடு வளர்ப்பு லாபகரமான தொழிலாக உருவெடுத்து வருகிறது. மலேசியாவில் ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் ஆடுகள் வரை தேவைப்படுகிறது."
>
> முனைவர். ராஜேந்திரன், இணை விஞ்ஞானி, செம்மறி ஆடு மற்றும் உரோம ஆய்வு நிலையம், மன்னவனூர்

## பாசமுள்ள புதிய தலைமுறைக்கு.... வணக்கம்



இச்செய்தி மடல் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புதிய தலைமுறை அறக்கட்டளை சிறப்பாக ஏழு ஆண்டுகளை கடந்து, எட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு உறுப்பினர்கள் கூட்டம் மே, 3 2017 அன்று சென்னை, வடபழனியில் உள்ள எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய தலைமுறை அறக்கட்டளை இதுவரையில் 1300 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - மருத்துவ முகாம், மரம் நடுதல் மற்றும் இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு முகாம்களையும் நடத்தியுள்ளது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் புதிய தலைமுறையும் மற்றும் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகமும் இணைந்து மாணவ மாணவியர்களுக்கு விழுதுகள் இலவச உயர் கல்வித் திட்டத்தை வழங்கி வருகிறது.

புதிய தலைமுறை அறக்கட்டளை மற்றும் Hyundai Motors இணைந்து கிராமப்புறக் கல்வித் திட்டத்தின் கீழ் இலவசக் கல்வி மையங்களை ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 15 கிராமங்களில் இலவச மாலை நேர வகுப்புகளை சிறப்பாக நடத்திவருகிறது. Hyundai நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முனைவர் ஆர்.பி.சத்தியநாராயணன்**
**நிறுவனர் மற்றும் அறங்காவலர்**
**புதிய தலைமுறை அறக்கட்டளை**

## பொது மருத்துவ முகாம் - மால்வாய் கிராமம் - திருச்சி மாவட்டம், ஏப்ரல் 19, 2017



புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் திருச்சி மாவட்டம் மால்வாய் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் ஏப்ரல் 19, 2017 அன்று சென்னை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் (SRM குழுமம்), திருச்சி இணைந்து பொது மருத்துவ முகாமினை நடத்தியது.

இம்முகாமினை காலை 10.30 மணி அளவில் மால்வாய் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவர் G.செந்தாமரைக்கண்ணன் துவக்கி வைத்தார். இந்த முகாமில் பொது மருத்துவம், தோல் நோய், அறுவை சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், எலும்பு முறிவு, கண், காது, மூக்கு மற்றும் தொண்டை, சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு போன்ற நோய்களுக்கு பரிசோதனை மேற்கொண்டு மருந்து மற்றும் மாத்திரைகள் கொடுக்கப்பட்டது. Dr. S. Elango, MD, Community Medicine, சென்னை மருத்துவக்கல்லூரி அவர்களின் தலைமையில் 25 பேர் கொண்ட மருத்துவக் குழுவினர் கலந்து கொண்டு சிகிச்சை மேற்கொண்டனர்.



இந்த முகாமில் 170க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பலன் பெற்றனர்.

## கிராமப்புறக் கல்வி மையத்தின் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் (2016-2017)

### மொத்த மதிப்பெண் 1200



செல்வி A. தங்கம்
கிராமப்புறக் கல்வி மைய மாணவி
தாண்டவராயபுரம் கல்வி மையம்
சேலம் மாவட்டம்

### தாண்டவராயபுரம் கல்வி மையம்: சேலம் மாவட்டம்

| | |
|---|---|
| தங்கம் A | 1028 |
| சரண்யா V | 937 |
| பானுமதி M | 920 |
| ஜெஸீமா பானு A | 877 |
| ஹரிஹரன் M | 846 |
| கோவர்தினி V.E | 767 |

### நாகப்பாடி கல்வி மையம் திருவண்ணாமலை மாவட்டம்

| | |
|---|---|
| சிவரஞ்சனி P | 717 |
| மகேந்திரன் E | 678 |
| சந்துரு R | 629 |

### கவசம்பட்டு கல்வி மையம் வேலூர் மாவட்டம்

| | |
|---|---|
| மீனா V | 742 |
| ஜெயஸ்ரீ R | 705 |
| சுதர்ஷன் S | 635 |

### பூவாளூர் கல்வி மையம் திருச்சி மாவட்டம்

| | |
|---|---|
| பரத்குமார் V | 961 |
| பாவனா V | 927 |

## கிராமப்புறக் கல்வி மையத்தின் பத்தாம் வகுப்பு பொது தேர்வு முடிவுகள் (2016 - 2017)

### மொத்த மதிப்பெண் 500

### கவசம்பட்டு கல்வி மையம் வேலூர் மாவட்டம்

| | |
|---|---|
| ரிஷிகேஷ் B | 477 |
| சிவகுமார் A | 463 |
| ஸ்ரீ ரேஷிகா H | 458 |
| அஸ்வினி K | 397 |
| இந்துமதி B | 390 |
| கஜலக்ஷ்மி K | 384 |
| தினேஷ் S | 348 |

### குப்புரெட்டிபட்டி கல்வி மையம் கரூர் மாவட்டம்

| | |
|---|---|
| யசோதா K | 429 |

### நாகப்பாடி கல்வி மையம் திருவண்ணாமலை மாவட்டம்

| | |
|---|---|
| நிஷா I | 350 |
| ராஜேஸ்வரி R | 312 |

### பாசார் கல்வி மையம் விழுப்புரம் மாவட்டம்

| | |
|---|---|
| சுரேஷ் S | 363 |

### மேலகூட்டுடான்காடு கல்வி மையம் தூத்துக்குடி மாவட்டம்

| | |
|---|---|
| செல்வி M | 431 |
| முத்து செல்வம் S | 332 |

## சோழமாதேவி கல்வி மையம்
## திருச்சி மாவட்டம்

| | |
|---|---|
| ஆஷாஹெலன் P | 454 |
| சரவணக்குமார் M | 452 |
| சுகன்யா B | 426 |
| திவ்யா C | 423 |
| லதா S | 411 |

| | |
|---|---|
| கீர்த்தனா M | 395 |
| வினோதா K | 385 |
| கிருத்திகா மேரி A | 382 |
| ராமச்சந்திரன் S | 378 |
| சர்மிளா R | 362 |
| நிஷா s | 339 |

## அன்பில் கல்வி மையம்
## திருச்சி மாவட்டம்

| | |
|---|---|
| பெனிட்டா S | 427 |

| | |
|---|---|
| சங்கீதா A | 392 |
| ஆனந்தி K | 360 |
| சூர்யா S | 313 |

## மால்வாய் கல்வி மையம்
## திருச்சி மாவட்டம்

| | |
|---|---|
| அருணாதேவி R | 442 |
| வினோதா S | 427 |
| பாசமலர் P | 413 |

| | |
|---|---|
| ஜெயபிரியா R | 375 |
| கனிமொழி K | 370 |
| நிஷாந்தி S | 323 |

## பூவாளூர் கல்வி மையம்
## திருச்சி மாவட்டம்

| | |
|---|---|
| நித்திஷ்குமார் M | 453 |
| முகமதுரியாஸ் R | 450 |
| ரஞ்சித்குமார் G | 451 |
| பிரசன்ன வெங்கடேஷ் R | 437 |
| பர்மன் P | 424 |

| | |
|---|---|
| பிரியதர்ஷினி A | 353 |

## கே.ம்.கோட்டை கல்வி மையம்
## இராமநாதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| கார்திகாதேவி B | 469 |
| ரமேஷ் G | 465 |
| மெடில்லா P | 460 |
| திவ்யா M | 460 |
| அனுஷா A | 458 |
| காயத்ரி G | 452 |
| கோமதி M | 450 |
| கலா M | 443 |

| | |
|---|---|
| ரம்யா M | 396 |
| கணேஷ்பாண்டி M | 394 |
| முருகேசன் P | 394 |
| பெருமளாக்கள் S | 392 |
| மாரீஸ்வரி M | 391 |
| ஜெயசித்ரா M | 391 |
| ஆர்த்தி J | 385 |
| மனோஜ்குமார் M | 385 |

# 7ஆம் ஆண்டு உறுப்பினர்கள் கூட்டம் - சென்னை
## மே 3, 2017



புதிய தலைமுறை அறக்கட்டளையின்
ஆண்டறிக்கை வெளியிட்ட காட்சி

புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு உறுப்பினர்கள் கூட்டம் மே 3, 2017 அன்று சென்னை, வடபழனியில் உள்ள SRM பல்கலைகழகத்தில் நடைபெற்றது. மாலை 4.30 மணிக்கு சிறப்பு விருந்தினர்கள் திரு.N.அருள்செல்வன், Deputy. Managing Director, NTTF, Bengaluru, V.வெங்கடேசன், ஆலோசகர், புதிய தலைமுறை அறக்கட்டளை, து.வே.வேங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை, ஆகியோர் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

பின்னர் சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய தலைமுறை அறக்கட்டளையின் 7-ஆம் ஆண்டறிக்கை சிறப்பு விருந்தினர்களால் வெளியிடப்பட்டது.

பின்னர் அறக்கட்டளையின் மூலம் கல்வி உதவித்தொகை பெற்று எஸ்.ஆர்.எம். பல்கலைகழகத்தில் படிக்கும் மாணவர்கள் தங்களது அனுபவங்களை எடுத்துரைத்தார்கள். பின்னர் புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் திரு.து.வே.வேங்கடகிரி, அவர்கள் கடந்த ஏழு ஆண்டுகளில் அறக்கட்டளை கடந்து வந்த பாதைகள், கிராமப்புறக் கல்வி மையத்தின் செயல்பாடுகள், சுயதொழில் மன்றம் நடத்திய (ISO 9001: 2008 தரச்சான்றிதழ்) விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள் மற்றும் அறக்கட்டளையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் கிராமப்புறக் கல்வி மைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், அறக்கட்டளையின் உறுப்பினர்கள், சுயதொழில் மன்ற உறுப்பினர்கள் உட்பட 160க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**"தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதையில் அறக்கட்டளை தொடர்ந்து சென்றால்-சுயதொழில் மேம்பாடு, கிராமப்புறக்கல்வி - பெரிய வெற்றிகள் நிச்சயம் உண்டு"**

V. வெங்கடேசன், ஆலோசகர்,
புதிய தலைமுறை அறக்கட்டளை











சிறந்த கிராமப்புறக் கல்வி மையத்திற்கான நினைவுப் பரிசினை ஆசிரியர்கள் வாங்கும் காட்சி

**2016-2017 ஆம் ஆண்டில் சிறப்பாக நடைபெற்ற கிராமப்புறக் கல்வி மையங்களில் 14 மையங்களுக்கு சிறப்பு விருந்தினர்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.**

| எண் | மையம் | மாவட்டம் | எண் | மையம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | பர்மா காலனி | திருச்சி | 8. | மதுரமங்கலம் | காஞ்சிபுரம் |
| 2. | பாப்பாகுறிச்சி | | 9. | சன்னியாக்குப்பம் | புதுச்சேரி |
| 3. | திருநெடுங்குளம் | | 10. | தாண்டவாரயபுரம் | சேலம் |
| 4. | திருவரங்கப்பட்டி | | 11. | வளசரவாக்கம் | சென்னை |
| 5. | நெமிலி | காஞ்சிபுரம் | 12. | கே.எம். கோட்டை | இராமநாதபுரம் |
| 6. | காட்ராம்பாக்கம் | | 13. | கிளவிப்பட்டி | தூத்துக்குடி |
| 7. | பிள்ளைப்பாக்கம் | | 14. | மார்த்தாண்டம்பட்டி | |



# கிராமப்புறக் கல்வி

## “எவ்வளவு நாட்களுக்குத்தான் கழிப்பறைகள் பற்றியும் மேஜைகள் பற்றியும் பேசிக்கொண்டு இருக்கப் போகிறோம்..... எப்போது நாம் கல்வி பற்றி பேசப் போகிறோம்?”

புதிய தலைமுறை அறக்கட்டளை **“தமிழ்நாட்டில் கிராமப்புறக் கல்வி”** என்ற தலைப்பில் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஹயக்ரிவ வித்யாஷ்ரம் பள்ளியில் ஜூலை 2, 2017 அன்று நடத்தியது. புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வேங்கடகிரி அவர்கள் பேசுகையில், கிராமப்புறக் கல்வி மையங்கள் பற்றியும், அதில் பயிலும் மாணவர்களின் குடும்ப /பொருளாதார சூழ்நிலை, கல்வியின் அவசியம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

**கிராமப்புறக்கல்வி மையங்கள்**
(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)



ஹூண்டாய் நிறுவனத்தின் மூத்த மேலாளர் HOD, CSR கே. ஸ்ரீதர் சிறப்புரையாற்றிய காட்சி

ஹூண்டாய் நிறுவனத்தின் மூத்த மேலாளர் கே. ஸ்ரீதர் அவர்கள் பேசுகையில், “கிராப்புற மாணவர்களின் வளர்ச்சிக்கு, முறையான கல்வி அவர்களை சென்றடையவேண்டும். இதில் எங்கள் ஹூண்டாய் நிறுவனம் முழு முயற்சியில் ஈடுபட்டு உள்ளது. கல்வி சேவைக்கு NGO நிறுவனங்கள் இதர நிறுவனங்களுடன் இணைக்கப்பட வேண்டும், கல்வி சேவையின் வாய்ப்புகளை இத்தகைய நிறுவனத்திடமிருந்து சரியான நேரத்தில் பெற்றிடவேண்டும். ஸ்ரீபெரும்புதூர் சுற்றியுள்ள பள்ளிகளுக்கு ஹூண்டாய் மோட்டார் இந்தியா அறக்கட்டளை வகுப்பு மேஜைகள் வழங்கியுள்ளது. ஹூண்டாய் மோட்டார் இந்தியா அறக்கட்டளை 600 மேஜைகளை தேவைப்படும் பள்ளிகளுக்கு வழங்க உள்ளது. ஹூண்டாய் நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற கல்விக்கு சேவை செய்துவருகிறது” என்றும் கூறினார்.

## கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் பேசுகையில்

1. அரசாங்க ஆசிரியர்களுக்கு பாடம் சொல்லிக்குடுப்பதைத் தவிர, நிர்வாக ரீதியாக பல சுமைகள் உள்ளது. இது மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் நேரத்தை வெகுவாக பாதிக்கிறது.

2. பொதுவாக மதுவின் பாதிப்பு கிராமங்களில் அதிக அளவில் உள்ளது. ஒரு குடும்பத் தலைவருக்கு மதுப்பழக்கம் இருந்தால், அது அந்த குடும்பத்தையும் பிள்ளைகளின் படிப்பையும் வெகுவாக பாதிக்கிறது.

3. பிள்ளைகளின் பெற்றோர்களிடம் நேர்காணல் நடத்தி, பிள்ளைகளை பள்ளியில் சேர்த்துக் கொள்ளும் தனியார் பள்ளிகள் அதிக அளவில் பெருகி வரும் இந்த நேரத்தில், எந்தவிதமான கேள்வியும் கேட்காமல் அரசாங்க பள்ளிகள் பிள்ளைகளை சேர்த்துக் கொள்கிறது. இது அரசாங்க பள்ளிகளின் சிறப்பு அம்சமாகும்.



R. கஸ்தூரி ரங்கநாதன், Correspondent
ஹயக்ரீவ வித்யாஷ்ரம் பள்ளி,

4. அரசாங்க பள்ளிகளில் பல சத்துணவுக் கூடங்களில் திங்கட்கிழமை மதியம் உணவுடன் முட்டை கிடைப்பதில் தாமதமாகிறது. ஆகையால், திங்கட்கிழமை வழங்க வேண்டிய முட்டையையும் சேர்த்து செவ்வாய்க்கிழமை மதியம் இரண்டு முட்டையாக மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இரண்டு முட்டைகளையும் சாப்பிட்ட மாணவர்கள், மதியம் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் தூங்கும் நிலைமையைத்தான் இன்று காண முடிகிறது. இந்த நிலை மாற வேண்டும்.

5. கிராமப்புறக் கல்வி மேம்படுத்துவதற்கு நிதி அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும். நிதி மட்டும் போதாது, அந்தநிதி முறையாக பயன்படுத்தப்படுகிறதா, கிராமப்புறக் கல்வி மையங்களில் அடிப்படை கட்டுமானமும், ஆர்வமுள்ள ஆசிரியர்களும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி புதிய புதிய வழிமுறைகளில் மாணவர்களுக்கு அறிவு புகட்டப்படுகிறதா, என்பனவற்றை உறுதி செய்ய வேண்டும்.

6. “எவ்வளவு நாட்களுக்குத்தான் கழிப்பறைகள் பற்றியும் மேஜைகள் பற்றியும் பேசிக்கொண்டு இருக்கப் போகிறோம். எப்போது நாம் கல்வி பற்றி பேசப் போகிறோம்?” என்று தங்கள் கருத்துக்களை ஆசிரியர்கள் பகிர்ந்து கொண்டனர்.

## அரும்பாவூர் பெரியஏரியை சுத்தப்படுத்துதல் மற்றும் சீமை கருவேல மரங்களை அகற்றுதல் - பெரம்பலூர், மார்ச் 11-13, 2017



சீமை கருவேல மரங்களால் நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தவும், நீர் ஆதாரத்தை பாதுகாத்திடவும் புதிய தலைமுறை அறக்கட்டளை தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.



புதிய தலைமுறை அறக்கட்டளை, புதிய தலைமுறை தொலைக்காட்சி - நம்மால் முடியும் குழு மற்றும் பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம் இணைந்து பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் கிராமத்தில் உள்ள பெரிய ஏரியை சுத்தப்படுத்தும் பணி மற்றும் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகள் மார்ச் 11-13, 2017 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அரும்பாவூர் பெரிய ஏரியில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியினை பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலுவலர் பி. வேலு அவர்கள் மார்ச் 11, 2017 சனிக்கிழமை காலை 10.45 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

**“ஏரிகளை தூர்வாரும் பணிகளில் புதிய தலைமுறை அறக்கட்டளையுடன் தொடர்ந்து செயல்பட விக்டரி லயன்ஸ் சங்கம் மிகவும் ஆர்வமாக உள்ளது.”**
Lions R. **கோபிநாத், சாசனத் தலைவர், பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம்**

நிகழ்ச்சியில் Lion. G.பாரதிராஜா, செயலாளர் (நிர்வாகம்), பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம் வரவேற்புரை ஆற்றினார். Lion. R. கோபிநாத், சாசனத் தலைவர், பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம் சிறப்புரை ஆற்றினார். பின்னர் புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வேங்கடகிரி, அவர்கள் அறக்கட்டளையின் பணிகள், கிராமப்புறக் கல்வி, சுயதொழில் மன்றத்தின் பணிகளையும் விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து புதிய தலைமுறை அறக்கட்டளையின் பெரம்பலூர் மாவட்ட கௌரவ அமைப்பாளர் A.V.E. பாபுவாணன் அவர்கள் கூறுகையில் பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் கிராமத்தில் உள்ள பெரிய ஏரியை சுத்தப்படுத்தும் பணி மற்றும் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளை மேற்கொண்டுள்ள புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

## PTF - SRM பல்கலைக்கழக Scholarship மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்



இடம்: Bio Engineering Auditorium, SRM பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர்

காட்டாங்குளத்தூரில் உள்ள SRM பல்கலைகழகத்தில் 15.02.2017 அன்று புதிய தலைமுறை மாணவர்களுக்கு Motivation நிகழ்ச்சி நடைபெற்றது. **Mr. Srinivasan Premkumar**, Reference Librarian, American Library மாணவர்களுக்கு தேவையான கருத்துக்களை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.



இடம்: American Library
American Consulate General, Chennai,

சென்னை அமெரிக்க தூதரகத்தில் உள்ள அமெரிக்க நூலகத்தில் 2017,பிப்ரவரி 17ல் Workshop on Communication Skills in English பயிற்சி நடைபெற்றது. **Ms. Julie Kalsow** அவர்கள் ஆங்கில உரையாடல் பயிற்சி மற்றும் தன்விவர குறிப்பு (Bio-data), ஆகியவற்றை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் புதிய தலைமுறை அறக்கட்டளை அலுவலர்கள் மற்றும் SRM பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சியில் கலந்துகொண்ட 20 மாணவர்களுக்கு சான்றிதழ் **Mr. Eric T Lund** அவர்களால் வழங்கப்பட்டது.



இடம்: SRM பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர்

காட்டாங்குளத்தூரில் உள்ள SRM பல்கலைகழகத்தில் 07.03.2017 அன்று புதிய தலைமுறை மாணவர்களுக்கு “How Community work can develop your personality” என்ற தலைப்பில் Motivation நிகழ்ச்சி நடைபெற்றது. **Mr.Faiz Ahmed, Management Consultant, Chennai** மாணவர்களுக்கு உரிய கருத்துக்களை விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 75க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி - சென்னை



புதிய தலைமுறை அறக்கட்டளையின் சுயதொழில் மன்றத்தின் மூலம் பெண்கள் சுயமாக தொழில் செய்யும் வகையில் **வள்ளிம்மை அம்மாள் தையற் பள்ளியினை** சென்னை, வளசரவாக்கத்தின் உள்ள அறக்கட்டளையின் இலவசக் கல்வி மையத்தில் ஜூலை 10, 2017 அன்று மாலை 5.00 மணியளவில் அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வேங்கடகிரி அவர்களால் துவங்கப்பட்டது. இந்த மையத்தில் தையற் பயிற்றுநர் திருமதி சந்தானலட்சுமி அவர்கள் தற்பொழுது 5 பெண்களுக்கு சுடிதார் மற்றும் ஜாக்கெட் தைப்பதற்கு பயிற்சி அளித்து வருகிறார். பயிற்சி வாரத்தில் 4 நாட்கள், திங்கள் முதல் வியாழன் வரை; காலை 10.00 மணி முதல் மதியம் 1 மணி வரை 20 நாட்களுக்கு கொடுக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் **8754417500, 8754417308** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

## "தேங்காய் நாருக்கு வெளிநாடுகளில் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகம் உள்ளன"
### சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கம் - பொள்ளாச்சி, ஜனவரி 28, 2017



புதிய தலைமுறை அறக்கட்டளையின் சுயதொழில் மன்றம் மற்றும் பொள்ளாச்சியில் உள்ள Dr. மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கினை பொள்ளாச்சியில் உள்ள Dr. மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் ஜனவரி 28, 2017 அன்று நடத்தியது.



கருத்தரங்கினை கோயம்புத்தூரில் உள்ள சிண்டிகேட் வங்கி மண்டல அலுவலகத்தின் மண்டல மேலாளர் எஸ். தேவராஜ், அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். எஸ். நாகராஜன், Project Officer, Extension Services Department, Sakthipura, NIA Educational Institutions, பொள்ளாச்சி வரவேற்புரை ஆற்றினார். பின்னர் அறக்கட்டளையின் செயல்பாடுகள், சுயதொழில் மன்றத்தின் செயல்பாடுகள் பற்றி புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் திரு.து.வே.வேங்கடகிரி அவர்கள் சிறப்புரையாற்றினார். அ. சுவாமிநாதன், Chief Coordinator, CIBIE & Campus Automation, Centre for Innovation, Dr. MCET Campus மற்றும் **T.**கிருபாகரன், பொது மேலாளர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

செல்வி. G. பரஞ்சோதி, Technical Officer, மண்டல அலுவலகம், தென்னை வளர்ச்சி வாரியம், சென்னை அவர்கள் தேங்காயில் மதிப்பூக்கூட்டி ஏற்றுமதி செய்யும் வழிமுறைகள், மற்றும் வியாபார நுணுக்கங்கள், தேங்காய் உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் தேங்காய் ஏற்றுமதி செய்ய தென்னை வளர்ச்சி வாரியத்தில்



உரிமம் பெறும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். K.S. கமாலுதீன், Managing Director, Bluebharath Exim Pvt. Ltd, சென்னை அவர்கள் ஏற்றுமதி & இறக்குமதி வழிமுறைகள் குறித்தும் ஏற்றுமதி செய்ய பொருட்களை தேர்ந்து எடுக்கும் முறை, பல்வேறு நாடுகளுக்கு தேவைப்படும் பொருட்களை தேர்ந்து எடுக்கும் வழிமுறை மற்றும் ஏற்றுமதி செய்யும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 550க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். **மேலும் நிகழ்ச்சி குறித்த விரிவான தகவலுக்கு www.microenterprises-ptf.org வலைதளத்தில் காணலாம்.**

**அச்சிட்டு வெளியிடுவோர் : து.வே.வேங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை**
**எண்: 24, ஜி.என். செட்டி சாலை, சென்னை - 600 017, தொலைபேசி: 044-45544029- 28341219 |**
**மின்னஞ்சல்:** contact@ptfindia.org | **வலை:** www.ptfindia.org